# தேவனுடைய தேசம்
# GOD'S NATION

**அறிமுகம்**

வேதத்தைக் கற்றுக்கொள்கிறவர்கள், இஸ்ரவேலின் சரித்திரத்தை தெரிந்துகொள்வதன் மூலமாக பழைய ஏற்பாட்டில் உள்ள காரியங்களை தேவனுடைய ராஜ்யத்தோடு பொருத்திப்பார்க்க முடிகிறது. தேவனை விட்டு அவருடைய ராஜ்யத்தை நம்மால் பிரித்தெடுக்க முடியாது; அதனால் கிறிஸ்தவர்களும் தங்களை அவருடைய ராஜ்யத்தோடு பொருத்திப்பார்க்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. *யாத். 19:5,6; 1 சாமு. 8:6,7; 1 நாளா. 28:5; சங்கீதம் 103:19; லூக்கா 4:43.* மக்கள் தேவனுடைய ராஜ்யத்தில் குடியுரிமைப் பெற்றிருக்கவேண்டும்; இல்லாவிட்டால், அவர்கள் சாத்தானுடைய ராஜ்யத்தில் குடியுரிமைப் பெற்றுவிட்டார்கள் என்று அர்த்தம். *லூக்கா 18:15-17; அப். 19:8; 26:18; எபே. 1:1-14; 2:1-3.* பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த மக்களுடைய இருதயங்களில் தேவன் தமது ராஜ்யத்திற்கு பொருத்தமான வாழ்க்கையை எப்படி பதிய வைத்திருந்தார் என்று முந்தைய பாடங்களில் புரிந்துகொண்டோம். இது நிகழ்ந்தது எப்படி என்று பின்வரும் வசனப்பகுதி விவரிக்கிறது.

*இப்பொழுதும் இஸ்ரவேலே, நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்புகூர்ந்து, உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து, நான் இன்று உனக்குக் கற்பிக்கிற கர்த்தருடைய கற்பனைகளையும் அவருடைய கட்டளைகளையும் உனக்கு நன்மையுண்டாகும்படி கைக்கொள்ளவேண்டும் என்பதையே அல்லாமல், வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார். இதோ, வானங்களும் வானாதி*





*வானங்களும், பூமியும் அதிலுள்ள யாவும், உன் தேவனாகிய கர்த்தருடையவைகள். உபா. 10:12-14.*

கிறிஸ்தவர்கள் தங்கள் வேத அறிவை வளர்த்துக்கொள்ள, வேதம் வாசிப்பதில் அவர்களுக்கு உதவுவதற்கென்றே இந்த பாடத்தொகுப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது. கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் போதித்துக் கொள்ளவேண்டுமென்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. தேவன் தமது வார்த்தையின் மூலம் பேசுகின்ற காரியங்களுக்குச் செவி கொடுப்பதை கிறிஸ்தவர்கள் தங்கள் குறிக்கோளாக மாற்றிக் கொள்ளவேண்டும். *1 கொரி. 2:4,5.* அவர் தமக்காக பேசும்படி இஸ்ரவேலரிடம் தீர்க்கதரிசிகளை அனுப்பினார். இவர்கள் முதலாவது வாய் வழியாகவும், அதன்பிறகு இலக்கிய வழியாகவும் இஸ்ரவேலருக்குப் போதித்தார்கள். பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்ட இலக்கியத்தின் மூலமாக தேவன் நம்மிடம் பேசுகின்றார். *1 தெச. 2:13.* கிறிஸ்தவர்கள் இந்த தெய்வீக இலக்கியத்தை வாசிப்பதில் திறமையுள்ளவர்களாயிருப்பதற்கு இச்செயல் உதவுகிறது. இன்றைக்கு உலகத்திலுள்ள மக்களில் ஏராளமானவர்கள் படிப்பறிவுள்ளவர்களாயிருக்கிறார்கள். இதில் விந்தையான விஷயம் என்னவென்றால், படிப்பறிவுள்ள கிறிஸ்தவர்கள்கூட, வேத வசனங்களின் அர்த்தத்தை மற்றவர்கள் தங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றே எதிர்பார்க்கிறார்கள். “நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு” ஒப்பான மனநிலையில் சத்தியத்தை தேடும் மக்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகளும், பிரிவினையும் உண்டாவதற்கு இந்த மனநிலை தான் காரணமாகவுள்ளது. *மத். 13:45.* சத்தியத்தின்படி வாழ மனதுள்ளவர்களெவர்களோ, அவர்களால் வேதத்திலுள்ள சத்தியத்தை கண்டறிய முடியும். *யோவான் 7:16,17.* மாம்சத்திற்குரிய இஸ்ரவேலை தேவன் உருவாக்கினதற்கான காரணத்தையும், அது உருவாக்கப்பட்ட விதத்தையும் கற்றுக்கொள்வதே இப்பாடத்தின் நோக்கம். தேவனுடைய உடன்படிக்கையின் மீது விசுவாசமுள்ள மக்களுக்குள் தமது ஆளுகையை

நிலைநிறுத்துவதற்கு உறுதுணையாக இருக்கவேண்டுமென்றே யாக்கோபின் வழியாய் உருவான ஆபிரகாமின் சந்ததியாரைக் கொண்டு ஒரு தேசத்தை உருவாக்குவதாக அவர் வாக்குத்தத்தம் பண்ணினார்.

**பாடம்**

ஒரு புதிய வித்தியாசமான தேசத்தை தேவன் உருவாக்கினார். அதின் குடிமக்களில் பெரும்பாலானவர்கள் ஆபிரகாமின் சந்ததி யாராயிருந்தார்கள். வேதாகமத்திலுள்ள விவரங்கள் இந்த தேசத்தைப் பற்றிய காரியங்களை அதிகம் தெரிவிக்கின்றன. ஆனாலும், ஒவ்வொரு தனி நபரின் வாழ்க்கையிலும் தேவனுடைய ஆளுகை இருப்பதை நாம் காணவேண்டுமென்றால், மறுபடியும் அந்த "நான்கு குறிப்புகள் அடங்கிய இறைக்கோட்பாட்டை" பயன்படுத்தவேண்டும். பின்வரும் பகுதி ஏழாம் பாடத்திலிருந்து எடுத்தெழுதப்பட்டுள்ளது.

1. பழைய ஏற்பாட்டு விவரங்களில் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய பிரசன்னம் காணப்படுகிறது. அவர் தமது தீர்மானத்தின்படியும், கிருபையின்படியும் நினைப்பதை செய்துமுடிக்கின்றார். *2 தீமோ. 1:9.*
2. சர்வ வல்லமையுள்ள தேவனால் "ஜீவாத்துமாக்களாக" படைக்கப்பட்ட மக்கள் தங்கள் ஆவிகளில் தேவனுடைய சாயல் உடையவர்களாக ஆண் அல்லது பெண் சரீரங்களில் வாழ்கின்றார்கள். அவர்கள் தங்கள் இயல்பான தேவைகளை நிறைவுசெய்துகொள்ளத் தேடுகிறார்கள். *ஆதி. 1:27;2:7; கலா. 3:28.*
3. "தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறது" என்று இயேசு அறிவித்தபடி மனிதர்கள் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி அடைந்த பிறகு அவர்களுக்கு உள்ளேயும்/வெளியேயும் ஆவிக்குரிய வளர்ச்சி உண்டாகிறது. *லூக். 17:21; மாற். 4:26-29; அப். 20:25; 1 கொரி. 3:7-9.*
4. தேவனுடைய உடன்படிக்கைகளை மீறும்படி மக்களை ஏவுகின்ற சாத்தானுடைய வல்லமை, தீய சக்தியாக இப்போது செயல்படுகின்றது. *1 நாளா. 21:1.*





உலகத்திலுள்ள எல்லா தேசங்களையும் தேவன் ஆட்சி செய்கிறார்; இருந்தபோதிலும், மனிதர்களுடைய ஆளுகை எங்கெல்லாம் இருக்கின்றதோ, அங்கெல்லாம் நாம் அவருடைய ஆளுகைக்கேற்ற வாழ்க்கையை பார்க்க முடியாது. ஆட்சி செய்பவர்களை நியமிக்கும் சிறப்புரிமையை அவர் சாத்தானிடம் ஒப்படைக்கக்கூடும்; என்றாலும், எல்லா ராஜ்யங்களும் அவருடைய அதிகார வரம்பிற்கு உட்பட்டிருக்கின்றன. *மத். 4:8.* பழைய ஏற்பாட்டுப் பகுதியில் அவர் ராஜாக்களை தள்ளுவதையும், ராஜாக்களை ஏற்படுத்துவதையும் நம்மால் பார்க்கமுடிகிறது. இஸ்ரவேல் தேசத்தை பயன்படுத்தி மற்ற தேசத்து மக்களுக்கு தமது மகிமையை வெளிப்படுத்த அவர் விரும்பியதும் இதற்கு ஒரு காரணமாயிருக்கின்றது. *உபா. 4:5-8, 32-34; 1 இராஜா. 8:59.* தேவன் சர்வ வல்லமையுள்ளவ ரென்று அவரை ஏற்றுக்கொள்ளாத தேசங்களிலுள்ள மக்களையும் அவரே ஆட்சி செய்கின்றார். பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் இந்தப் பாடத்தை மிகவும் "கஷ்டப்பட்டுக்" கற்றுக்கொண்டான். *தானி. 4:27,37.*

வனாந்திரத்தில் நாற்பது ஆண்டுகளாக "விசுவாசமும் தைரியமுமுள்ள" மோசேயை தேவன் பயன்படுத்தி வந்தார். அடிமைகளாய் இருந்த இஸ்ரவேல் சந்ததியாரை தமது புதிய தேசத்தின் குடிமக்களாக ஆயத்தப்படுத்துவதே அவருடைய நோக்கமாயிருந்தது. நோவாவுடனும், அவன் குடும்பத்துடனும் உடன்படிக்கை செய்துகொண்டது போலவே, இஸ்ரவேல் மக்களுடனும் உடன்படிக்கைகளை செய்துகொண்டார். அவருடைய மக்களுக்கு அவர் ஏற்படுத்தியுள்ள தேவைகளை திருப்திப்படுத்தக்கூடிய வகையிலேயே அவர் தம்முடைய உடன் படிக்கைகளை எப்பொழுதும் ஏற்படுத்துகின்றார். *உபா. 4:31; 7:12-15; மத். 6:31-34.* அவர்களுடைய சரீரத்தேவைகளையும், அவர்களுடைய ஆவிகளுக்கு அவசியமான புகழ்ச்சி, கனம், மகிமை ஆகியவற்றையும் திருப்திப்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை தேவன் செய்தார். *உபா. 8:17,18; 1 பேதுரு 1:7.* அவர் கொடுக்கும் நன்மைகளை அனுபவிப்பதற்கு அவருடைய வார்த்தைகளை கேள்விப்படுவதால் வரும்

விசுவாசத்தில் இஸ்ரவேல் உறுதியாயிருக்கவேண்டியிருந்தது. *உபா. 6:1-9; 11:18-21.* விசுவாசமுள்ளவர்கள் எவர்களோ அவர்களுக்கு தேவன் கிருபையை தருகிறார், இந்தக் கிருபையினால் அவர்கள் அநேக நன்மைகளை அனுபவிக்கமுடிகிறது.

லேவி ஆசாரியத்துவ முறைமையின் செயல்பாடுகளோடு தொடர்புடைய உடன்படிக்கைகள் இஸ்ரவேலருக்கு வழங்கப்பட்டன. "லேவிய ஆசாரியத்துவ முறைமையின் நோக்கம்" என்ற முந்தைய பாடத்திலுள்ள தகவலும், இஸ்ரவேலரைப் பற்றி தேவனுடைய மனதில் இருந்தது என்ன என்பதை பற்றிய புரிந்துகொள்ளுதலும் என்னவென்றால், அவைகள் தேவனுடைய பரலோக ராஜ்யத்தின் நிழலாக மாம்சத்துக்குரிய இஸ்ரவேலருக்கும், ஆவிக்குரிய இஸ்ரவேலராகிய சபைக்கும் இருக்கவேண்டும் என்பது தான். *எபிரெயர் 8:5;9:23,24.* தேவன் இஸ்ரவேலர் மீது அன்புள்ளவராக அவர்களுக்குச் செய்ய விரும்பிய வைகளை அறிந்துகொள்ள *உபாகமம் 28:1-14* வரையிலான வசனங்களை தயவுகூர்ந்து வாசியுங்கள். அவருடைய விருப்பம் இஸ்ரவேல் தேசத்தில் நிறைவேறவில்லை; ஆனாலும் ஒரு சிலருடைய இருதயங்களிலும், மனங்களிலும் அது நிறைவேறியது. பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த தேவனுடைய மக்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய ராஜ்யம் இடம்பெற்றிருந்தது; அப்படி இல்லையென்றால், அந்த ராஜ்யம் அங்கு இல்லை என்று அர்த்தம். ஆவிக்குரிய ராஜ்யத்தில் தேவன் சொல்வது எதுவோ அதுவே உண்மையாக இருக்கின்றது. இன்றைக்குள்ள மத சம்பந்தமான ராஜ்யத்தில் "உண்மை" எனப்படுவது எதுவோ அது மனிதருடைய ஞானத்தோடு இணைந்ததாகவே இருக்கின்றது; இதனால் இந்த ராஜ்யத்தை தேவனுடைய ராஜ்யம் என்று சொல்லிவிடமுடியாது. பிதாவாகிய தேவனிடமிருந்த கிருபையையும் சத்தியத்தையும் இயேசுவே மனிதனுக்கு வெளிப்படுத்தினார். இப்படியிருக்க, ஒருவனும் மனுஷரைக் குறித்து மேன்மைபாராட்டாதிருப்பானாக. *1 கொரி. 3:21.* பரிசுத்த





ஆவியானவர் மூலமாக அப்போஸ்தலனாகிய பவுல் அறிந்துகொண்ட செய்தி இதுதான். *1 கொரி. 2:10-16.*

மோசே மோவாப் தேசத்திலுள்ள நேபோ மலையிலே மரணமடைந்த பிற்பாடு, இஸ்ரவேலரை வழிநடத்தும்படி விசுவாசமும், தைரியமும் நிறைந்த யோசுவாவை தேவன் பயன்படுத்தினார். *உபா.34:5,9.* கானான் தேசத்து கிழக்கு எல்லையான யோர்தான் ஆற்றண்டை வந்தபின்பு, அவர்களை தலைமை தாங்கி வழிநடத்தக்கூடிய மேலான அதிகாரத்தை அவர் யோசுவாவுக்கே வழங்கினார். *யோசுவா 1:1-5.* தேவன் பயன்படுத்தின நோவா, ஆபிரகாம், மோசே, யோசுவா போன்றவர்களும், இவர்களைப் போல் வாழ்ந்த மற்றவர்களும் விசுவாசமும், தைரியமும் உள்ளவர்களாய் இருந்தார்கள்; இவர்களுடைய வாழ்வில் தேவனுடைய ராஜ்யம் இடம்பெற்றிருந்தது என்பதை புரிந்துகொள்கிறோம். இதன் காரணமாக தேவனுடைய பரலோக ராஜ்யத்தின் ஒரு பகுதி இதே மக்களுக்குள் பூமியின் மீது இடம் பெற்றிருந்தது. தேவனுடைய உடன்படிக்கைகளின் வழியாக வெளிப்படுத்தப்பட்ட அவருடைய சித்தத்தின்மீது விசுவாசம் உள்ளவர்களாய் வாழ்ந்து மரித்த எல்லாருடைய வாழ்க்கையிலும் உண்மையிலேயே தேவனுடைய ராஜ்யம் இடம்பெற்றிருந்தது.

ஆபிரகாம், சாராள் தம்பதியினருக்கு பிறந்த ஒரே மகனாகிய ஈசாக்கின் மூலமாகவும், அவன் மகன் யாக்கோபின் மூலமாகவும் ஒரு தேசத்தை உருவாக்கப்போவதாக தேவன் வாக்குத்தத்தம்பண்ணினார்; இந்த ஒட்டுமொத்த விவரங்களையும் *அப். 7:1-53* வரை உள்ள வசனங்களில் ஸ்தேவான் நமக்குச் சுருக்கமாகத் தெரிவிக்கிறான். கானான் தேசத்தில் உண்டான பஞ்சத்தின் காரணமாக, தேவன் யோசேப்பை பயன்படுத்தி யாக்கோபின் சந்ததியாரை எகிப்துக்குக் கொண்டு போனார். 430 வருடங்கள் கழித்து அவர் மோசேக்குக் கட்டளையிட்டு, அவர்களை மீட்டுக்கொண்டுவரும்படி செய்தார். யாக்கோபின் பெயரை

இஸ்ரவேல் என்று அவர் மாற்றியிருந்ததினால், இந்த மக்களால் ஆன தேசம் இஸ்ரவேல் தேசம் எனப்பட்டது. *ஆதி. 32:28.* இஸ்ரவேல் என்பதன் அர்த்தம் "தேவனோடே போராடுகிறவன்" என்பதாகும். ஒரு சாதாரண மனிதனை அவர்கள் வேண்டுகோளின்படி அவர்களுக்கென்று ராஜாவாக நியமித்துவிட்டபிறகு கூட, தேவன் அவர்களுடைய ராஜாவாக தொடர்ந்து அவர்களுடன் போராடிக்கொண்டிருந்தார். *1 சாமுவேல் 8:7.*

நாம் கேட்கவேண்டிய கேள்வி இது தான், "வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளை" ஒரு விசேஷித்த நிலப்பரப்புக்கு அழைத்துக் கொண்டுவந்து, "ஒரு தேசமாக உருவாக்கி" தேவன் தாமே அவர்களுக்கு ராஜாவாக இருக்கக் காரணம் என்ன? இதற்குப் பதில் அளிப்பதற்கு நாம் இன்னொரு கேள்வியையும் கேட்க வேண்டும் : "ஆதாமின் காலந் தொடங்கி மோசேயின் காலம் வரைக்கும் மரணம் ஆளுகை செய்ய வேண்டிய காரணம் என்ன?" நம்முடைய முந்தைய பாடங்களில் இந்தப் பிரச்சனை பற்றி பார்த்திருக்கிறோம். குடும்ப தலைவர்களாய் இருந்த பிதாக்களானவர்கள், தேவன் தமது உடன்படிக்கைகளின் வழியாக வெளிப்படுத்திய அவருடைய சித்தத்திற்கு ஏற்றபடி தங்கள் குடும்பங்களை வழிநடத்தவில்லை. இந்தப் பிரச்சனையை, ஜலப்பிரளயத்தைப் பற்றி வேதம் தெரிவிக்கும் விவரங்களில் நாம் ஏற்கனவே பார்த்திருக்கிறோம். *ஆதியாகமம் 6:1-3.* தேவனுடைய ராஜ்யத்தில் பிள்ளைகளை உருவாக்குவதற்காக அவர் ஏற்படுத்திய அமைப்புதான் குடும்பம். *ஆதி. 2:24,25; மத்தேயு 19:1-9.* ஆண்களே குடும்பத் தலைவர்களாயிருந்தார்கள். *1 கொரி. 11:3; எபேசியர் 5:22; 6:1-4.* இயேசு கிறிஸ்து இந்தப் பூமியில் வாழ்ந்தபோது அவர்தாமே வாழ்ந்துகாட்டியவைகளும் போதித்தவைகளுமான ஜீவப் பிரமாணங்கள், மனிதர்கள் தேவனுடைய பிள்ளைகளாக வளர்ச்சிப் பெறும் அதிசயத்தை காண்பித்தன. *யோவான் 1:3,4,12.* தேவன் மனுக்குலத்துக்குக் கொடுத்த வடிவமைப்பும், அவர் மனுக்குலத்தை உருவாக்கினதற்கான நோக்கமும் ஒரு போதும் மாறாததினால், இந்தப் பிரமாணங்களும் மாறவில்லை.





மக்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் நிலைமையைப் பொறுத்தே அவர்களை அவர் பயன்படுத்தி வந்தார். நோவாவின் காலத்தில் இந்தப் பூமியின் மீது வாழ்ந்து வந்த குடும்பத் தலைவர்கள், தங்கள் கடமையை சிறப்பாகச் செய்ய முடியவில்லை. யாக்கோபு தன் குடும்பத்துக்குத் தலைவனாயிருந்தான். அவன் மரணமடைந்த பிற்பாடு எகிப்தில் அவன் விட்டுப் போன குடும்பங்களுக்கு அவனுடைய பிள்ளைகள் தலைவர்களாயிருந்தார்கள். பார்க்கவும் *ஆதி. 46:8-27.* அவர்கள் எகிப்திலிருந்தபொழுது ஏதோ பிரச்சனை ஏற்பட்டதினால், தேவன் அவர்களை விக்கிரக ஆராதனை செய்யும் ஆட்சியாளர்களிடம் அடிமைகளாகும்படி விட்டுவிட்டார்.

தேவன் அவர்கள் அடிமைகளாகும்படி விட்டுவிட்டதினால், நாம் கட்டாயம் கேட்க வேண்டிய கேள்வி இதுதான் "ஏன்?" மோசே விடுதலையாக்கி அடிமைத்தனத்திலிருந்து அழைத்து வந்த மக்களிடம் அநேக மோசமான பிரச்சனைகள் இருந்தன என்பதை நாம் அறிவோம். அவைகளில் ஒன்று விக்கிரக ஆராதனை ஆகும். இஸ்ரவேல் தேசம் இஸ்ரவேல் – யூதா என்று இரண்டாக பிளவடைந்த பின்பு அவர்களுடைய ராஜாக்களால் ஆளுகை நடந்துவந்தபோதும், அவர்களுக்கு இந்த விக்கிரக ஆராதனையே தொடர்ந்து பிரச்சனையாக இருந்து தோல்வியை ஏற்படுத்தி வந்தது. தேவன் தம்முடைய உடன்படிக்கை மீது விசுவாசம் இல்லாத மக்களை விட்டு ஆபிரகாமின் சந்ததியாரை தனிமைப்படுத்த திட்டமிட்டார். அவனுடைய சந்ததியார் உலகத்தோடு ஒன்றுபடாமல் இவ்வுலகத்தில் வாழக்கூடிய உறுதி இல்லாதவர்களாய் இருந்தார்கள். தேவ பக்தி இல்லாத அரசாங்கங்களுக்கு கட்டுப்பட்டவர்களாய் வாழ்ந்த அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தின் அதிகாரத்தின் மீது விசுவாசம் உள்ளவர்களாய் வாழ்வதற்கு உறுதி இல்லாதவர்களாய் இருந்தார்கள். இப்படியாக தேவன் திட்டமிட்டு ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம்பண்ணினார்: "நான் உன் சந்ததிக்கு இந்த தேசத்தைக் கொடுப்பேன்." *ஆதி. 12:7; 15:18-21.* தேவனுடைய

"வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளை" பாதுகாப்பதற்கு தேசத்தை கொடுப்பது மட்டுமே போதுமானது அல்ல. ஆபிரகாம் பெரிய பலத்த ஜாதியாவான், அவனுக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் அறிவித்தார். *ஆதி. 18:17.* கிறிஸ்து வருகிற வரையிலும், ஆபிரகாமின் சந்ததியாரை ஆவிக்குரிய வகையில் தனிமைப்படுத்தி வைக்கவேண்டும் என்று தேவன் திட்டமிட்டார். இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவே தனித்தன்மையுடைய இந்த தேசத்தில் அவர்களை வாழ வைத்தார். மோசே எகிப்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த இஸ்ரவேலர், சாத்தானுடைய மக்களை விட்டு பிரித்தெடுக்கப்பட்ட நிலைமையில் தொடர்ந்து நீடிப்பதற்கு ஒரு உறுதியான பூமிக்குரிய எல்லையும் இருக்கவேண்டும் என்று தேவன் தம்முடைய ஞானத்தினால் அறிந்துகொண்டார். கிறிஸ்தவர்களை இந்த உலகத்தை விட்டுப் பிரித்தெடுக்கும் ஒரு விசேஷித்த, தனித்தன்மையுடைய ஆவிக்குரிய எல்லையாக இருப்பது "கிறிஸ்துவுக்குள்" என்ற வார்த்தையாகும். *கொலோசெயர் 3:1-4.*

தங்களது விசுவாசமுள்ள நடக்கையால் தேவனைப் பிரியப்படுத்திய மக்களின் பெயர்களை எபிரெய எழுத்தாளன் பட்டியலிடுகிறான்; இதில் மோசேயின் பெயரும் இடம்பெற்றுள்ளது. இந்த விவரத்தை நாம் கவனிக்கும்போது, பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்கு நன்மை உண்டாகும் பொருட்டு, ஒரு ஆவிக்குரிய "வாழ்க்கைப் பெட்டியை" உருவாக்கிக் கொடுப்பது எவ்வளவு முக்கியமானது என்று புரிந்து கொள்ளலாம்.

*மோசே பிறந்தபோது அவனுடைய தாய் தகப்பன்மார் அவனை அழகுள்ள பிள்ளையென்று கண்டு, விசுவாசத்தினாலே, ராஜாவினுடைய கட்டளைக்குப் பயப்படாமல் அவனை மூன்றுமாதம் ஒளித்துவைத்தார்கள். விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல் எகிப்தை விட்டுப் போனான். விசுவாசத்தினாலே, முதற்பேறானவைகளைச் சங்கரிக்கிறவன் இஸ்ரவேலரைத் தொடாதபடிக்கு, அவன் பஸ்காவையும் இரத்தம் பூசுதலாகிய நியமத்தையும் ஆசரித்தான். எபிரெயர் 11:23-28.*





எல்லாப் பிள்ளைகளும் அழகுள்ள பிள்ளைகள் தான்; இருப்பினும், தேவன் மோசேக்காக ஒரு சிறப்புப் பணியை ஆயத்தம்பண்ணி வைத்திருந்தார். தான் இஸ்ரவேலரைச் சேர்ந்தவன் என்று மோசே அறிந்து கொண்டான். ஆபிரகாமைப் போல மோசேயின் விசுவாசம் "பூரணப்பட்டதென்று" காணப்படும் காலம் வரும் வரையிலும் சோதிக்கப்படவேண்யது அவசியமாய் இருந்தது. *யாக்கோபு 1:2-4;2:22; 1 பேதுரு 1:7.* ஒரு கிறிஸ்தவனுடைய "விசுவாசம் பூரணப்படுவது" எதை அர்த்தப்படுத்துகிறது என்றால், அது அவனுடைய / அவளுடைய **அடையாளத்தின்** அஸ்திபாரமாக விசுவாசம் இருக்கிறது என்பதை தான். ஒரு இளைஞனுடைய தற்கால சந்தோஷத்துக்கும், அவனை மேம்படுத்துகிற முன்னேற்றத்துக்கும் அவனுடைய அடையாளம் மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது. தங்கள் பிள்ளைகளுடைய ஆவிகள் தேவனிடத்திலிருந்து வந்தவைகள் என்பதையும், அவர்கள் தேவனுடைய ராஜ்யத்துக்குச் சொந்தமானவர்கள் என்பதையும் பெற்றோர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். "இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு

எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரமபிதாவின் சமூகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு சொன்னார். *மத். 18:10.* தேவன் மீது விசுவாசம் உள்ள குடும்பத்தில் மோசே பிறந்தது அவனுக்கு தேவனிடமிருந்து கிடைத்த ஒரு ஆசீர்வாதமாகும். தங்கள் விசுவாசத்துக்கு ஏற்ப கீழ்ப்படியக்கூடிய தைரியம் அவனது பெற்றோருக்கு இருந்தது. *ரோமர் 1:6,7.* மோசே தனது பிறப்பின் "வாழ்க்கைப் பெட்டியை" அதாவது பிறப்பின் சூழ்நிலையை தனக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொண்டான். பிற்பாடு, பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்று அழைக்கப் படுவதினால் கிடைக்கக்கூடிய இன்பங்களையோ அல்லது தேவனுடைய குமாரனாக உருவாவதற்கு அவசியமான துன்பங்களையோ அவன் தேர்ந்தெடுக்கவேண்டியிருந்தது. *எபிரெயர் 12:5,6.* அவன் தன்னுடைய முற்பிதாக்களோடு தேவன் பண்ணியிருந்த உடன்படிக்கைளின் மீது விசுவாசம் உள்ளவனாக வாழும்படியாக சரியானதொரு முடிவெடுத்தான். இளமைப் பருவத்தில் உள்ள எல்லாரையும் போலவே அவனும் தேர்ந்தெடுப்பதற்குக் கடினமான சூழ்நிலையை சந்திக்க நேர்ந்தது. குறுகிய காலத்துக்குக் கிடைக்கக் கூடிய பாவசந்தோஷங்கள் அல்லது என்றென்றும் தேவனுடைய பிள்ளையாக இருப்பது. *2 கொரி. 6:17,18.* மோசே தன் விசுவாசத்தினால் நீதியுள்ளவனாகி, தைரியமாய் செயல்பட்டான். *உபாகமம் 34:12.* நீதி அல்லது பாவம்; சரி அல்லது தவறு; நன்மை அல்லது தீமை. இது போன்று தேர்ந்தெடுக்கவேண்டிய சூழ்நிலைகளை சந்திப்பதற்கு ஏற்ப தைரியமுள்ள மக்களை விசுவாசம் உருவாக்குகிறது.

தேவன் மோசேயைப் போன்ற மனிதர்களைப் பயன்படுத்திக் கொண்டார். "பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் என்பவர்களையும், தீர்க்கதரிசிகளையுங்குறித்து நான் விவரஞ்சொல்லவேண்டுமானால் காலம் போதாது. விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை





ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்.'' *எபிரெயர் 11:32,33.* பெண்கள் தாங்கள் செய்த தைரியமான செயல்கள் மூலமாக விசுவாசத்தைக் காண்பித்தார்கள். "விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகாதிருந்தாள்." *எபி. 11:31.* "ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்; வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்." *எபிரெயர் 11:35.* இஸ்ரவேலை உருவாக்குவதற்காக தம்மோடு ஒத்துழைக்கக் கூடிய தைரியமுள்ள மனிதர்களை தேவன் பயன்படுத்தினார்; "சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது. நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்." *யாத். 19:5,6.* லேவிய ஆசாரியத்துவ காலத்தில் கொடுக்கப்பட்டிருந்த பிரமாணங்கள் அவர்களுடைய ஆவிக்குரிய பிரமாணங்களாகவும் தேசிய பிரமாணங்களாகவும் இருந்தன. தேவன் அவர்களுடைய ராஜாவாயிருந்தார்; அவருடைய மக்கள் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று விரும்பினாரோ, அந்த விருப்பத்தை விவரிக்கக்கூடிய பிரமாணத்தையே அவர் மோசேயிடம் கொடுத்தார். *ரோமர் 7:14; யாக்கோபு 1:20.* அவர்கள் ஒரு பெரிய தேசமாகி, சுற்றியிருக்கக்கூடிய மற்ற தேசங்களுக்கெல்லாம் வெளிச்சத்தை காண்பிக்கும் வண்ணம், அவர்கள் ஒருவரோடொருவர் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்று இந்தப் பிரமாணம் அவர்களுக்கு சொல்லிக்கொடுத்தது. தேவன் தமது புதிய உடன்படிக்கையில் கொடுத்துள்ள ஜீவப்பிரமாணமானது கிறிஸ்தவர்களுடைய மனங்களிலும், இருதயங்களிலும் எழுதப்பட்டுள்ளதனால், நம்முடைய உடல்கள் "நீதியின் ஆயுதங்களாக" மாறுகின்றன. *ரோமர் 6:13.*

தேவன் தங்களோடு பண்ணிக்கொண்ட உடன்படிக்கைகள் மீது விசுவாசம் உள்ளவர்களாய் வாழ்ந்த ஆவிக்குரிய மக்களுக்கு நியாயப்பிரமாணம் பயனுள்ளதாய் இருந்தது. *மத்தேயு 5:17-19; 1 தீமோத்தேயு 1:8-11.* அதனால் அவர்களுடைய "பாவம் உயிர்கொண்டது", இதன் மூலமாக அவர்கள் தங்கள் "உள்ளான மனிதனில்" இருந்த குறைகளை கண்டறிந்து, சரிசெய்துகொள்ள முடிந்தது. *ரோமர் 7:9.* மனப்பூர்வமாய் பாவஞ்செய்தவர்களை அது குற்றஞ்சாட்டி ஆவிக்குரிய மரணத்தை தண்டனையாக வழங்கியது. தேவனுடைய உதவியினால் சிவந்த சமுத்திரத்தைக் கடந்துவந்த இஸ்ரவேலர்கள், எகிப்தில் இருந்தபோது பாவிகளாய் இருந்தார்கள்; அப்படியிருப்பினும், அவர்களுடைய பாவத்தைக் குறித்து மெல்கிசேதேக்கின் முறைமையின் படியான பிரமாணமானது அவர்களைக் குற்றஞ்சாட்டவேயில்லை. *ரோமர் 5:12,13.* அவர்கள் தங்கள் பாவங்களுக்குக் காரணமானவற்றை ஜெயிக்கும் பொருட்டு, அவர்களது பாவங்கள் நிமித்தம் குற்றஞ்சாட்டக்கூடிய ஒரு பிரமாணம் தேவையாயிருந்தது. இதை செய்வதற்கு மோசேயின் நியாயப்பிரமாணம் போதுமானதாய் இருந்தது. *ரோமர் 3:19,20.* மக்களின் பாவத்தின் நிமித்தம் அவர்களை குற்றஞ்சாட்டும் ஒரு பிரமாணத்தின் கீழ் வாழ்வது எந்த அளவுக்கு பிரச்சனைக்குரிய ஒரு காரியம் என்பதை அப்போஸ்தலனாகிய பவுல் விளக்கிக் கூறுகிறான்; அதுமட்டுமல்ல, இது போன்ற ஒரு பிரமாணம் இஸ்ரவேலர்களுக்கு அவசியமானது தான் என்று அவனே தெரியப்படுத்துகிறான். *ரோமர் 7:14-20.* அவர்கள் பாவிகளாகத் தான் இருந்தார்கள். ஆனால் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும் வரைக்கும், அதைக் குறித்ததான விழிப்புணர்வு அவர்களுக்கு இல்லாதிருந்தது. *ரோமர் 7:7,8.*

அவர்கள் "விசுவாசத்தினாலே வாழ்ந்தார்கள்" என்று தேவனுடைய வசனமே சொல்வதினால் தேவனுடைய ராஜ்யத்துக்கு ஏற்ற கலாச்சாரம் அல்லது வாழ்க்கையானது சில இஸ்ரவேலருடைய மனங்களிலும்,





இருதயங்களிலும் இடம்பெற்றிருந்தது என்பதை அறிந்துகொள்கிறோம். தேவன் தனக்கு கொடுத்த வேலையை செய்துமுடித்த பின்பு ஜனங்களை நோக்கி, யோசுவா சொன்னது, "இப்பொழுதும் உங்கள் நடுவே இருக்கிற அந்நிய தேவர்களை அகற்றிவிட்டு, உங்கள் இருதயத்தை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு நேராக திருப்புங்கள்" என்றான். யோசுவா சொன்னபடியே செய்வோம் என்று அந்த ஜனங்கள் சொன்னபோதிலும், அந்த தெய்வங்களை விட்டு அவர்கள் முற்றிலும் விலகி வரவில்லை. இஸ்ரவேல் தேசத்தின் நிறை, குறைகளைப் பற்றி சில விஷயங்களை பின்வருமாறு பார்க்கலாம்:

*யோசுவா 24:31.*

> "யோசுவா உயிரோடிருந்த சகல நாட்களிலும், கர்த்தர் இஸ்ரவேலுக்குச் செய்த அவருடைய கிரியைகள் யாவையும் அறிந்து யோசுவாவுக்குப்பின்பு வெகுநாள் உயிரோடிருந்த மூப்பருடைய சகல நாட்களிலும், இஸ்ரவேலர் கர்த்தரைச் சேவித்தார்கள்."

*நியாயாதிபதிகள் 2:10,11*

> "அக்காலத்தில் இருந்த அந்தச் சந்ததியார் எல்லாரும் தங்கள் பிதாக்களுடன் சேர்க்கப்பட்டபின்பு, கர்த்தரையும், அவர் இஸ்ரவேலுக்காகச் செய்த கிரியையையும் அறியாத வேறொரு சந்ததி அவர்களுக்குப்பின் எழும்பிற்று. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, பாகால்களைச் சேவித்து"

*நியாயாதிபதிகள் 2:20-22*

> "ஆகையால் கர்த்தர் இஸ்ரவேலின் மேல் கோபமூண்டவராகி: இந்த ஜனங்கள் தங்கள் பிதாக்களுக்கு நான் கற்பித்த என் உடன்படிக்கையை மீறி என் சொல்லைக் கேளாதேபோனபடியால்,

யோசுவா மரித்துப் பின்வைத்துப்போன ஜாதிகளில் ஒருவரையும். நான் இனி அவர்களுக்கு முன்பாகத் துரத்திவிடாதிருப்பேன். அவர்கள் பிதாக்கள் கர்த்தரின் வழியைக் கவனித்ததுபோல, அவர்கள் அதிலே நடக்கும்படிக்கு, அதைக் கவனிப்பார்களோ இல்லையோ என்று, அவர்களைக்கொண்டு இஸ்ரவேலைச் சோதிப்பதற்காக அப்படிச் செய்வேன் என்றார்."

*நியாயாதிபதிகள் 2:16*

"கர்த்தர் நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணினார்; அவர்கள் கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார்கள்."

மேற்கண்ட வசனங்கள் நமக்குத் தெரிவிக்கின்ற செயல்பாடுகள் இஸ்ரவேலுடைய சரித்திர பாதையாக ஆகிவிட்டன. தேவனுடைய உடன்படிக்கையை கைக்கொள்ள தவறுவார்கள்; தேவன் தமது பாதுகாப்பை இதினிமித்தம் அவர்களை விட்டு நீக்கி விடுவார்; அவர்களது எதிரிகள் அவர்களுக்கு எதிராக வந்து நெருக்குவார்கள்; அவர்கள் தேவனை நோக்கி, உதவிக்காக வேண்டுதல் செய்வார்கள்; காலம் நிறைவேறும்போது இயேசு கிறிஸ்துவை அனுப்பவேண்டும் என்ற அவருடைய திட்டத்தினாலும், அவர்கள் மீது அவர் கொண்டிருந்த அன்பினாலும், தமது வல்லமையைக் கொண்டு எதிரிகளை விரட்டி விடுவார். தேவன் விரும்புகின்ற ஒரு தேசமாக இஸ்ரவேல் தேசம் இருக்கமுடியாமல் போனதற்கு இந்த "ஏற்ற இறக்கம்" நிறைந்த சூழ்நிலையே காரணமாய் அமைந்தது. அவர்களுடைய தேசத்தை மீட்கும்படியாக விசுவாசமும், தைரியமும் கொண்டிருந்த சில ஆண்களையும், பெண்களையும் அவர் தேர்ந்தெடுத்து தொடர்ந்து பயன்படுத்தி வந்தார். *நியாயாதிபதிகள் 4:4,9; 6:12.* அதன் பிறகு சிறிது காலம் கழித்து தீர்க்கதரிசிகள் மூலமாய் தமது வல்லமையை நிலைநிறுத்தினார்.





*1 சாமுவேல் 3:1*

"சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் ஏலிக்கு முன்பாகக் கர்த்தருக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்தான்; அந்நாட்களிலே கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருந்தது; பிரத்தியட்சமான தரிசனம் இருந்ததில்லை." பார்க்கவும் *1 சாமுவேல் 3:20,21.*

*1 சாமுவேல் 8:6,7*

"எங்களை நியாயம் விசாரிக்க ஒரு ராஜாவை ஏற்படுத்தும் என்று அவர்கள் சொன்ன வார்த்தை சாமுவேலுக்குத் தகாததாய்க் காணப்பட்டது; ஆகையால் சாமுவேல் கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினான். அப்பொழுது கர்த்தர் சாமுவேலை நோக்கி: ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக் கேள்; அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு என்னைத்தான் தள்ளினார்கள்."

தேவன் தாம் தேர்ந்தெடுத்திருந்த தலைவர்கள் அவருடைய உடன்படிக்கையில் உள்ள பிரமாணங்களின்படி நடந்துகொண்டபோது, அவர்களை எப்படி பயன்படுத்திக்கொண்டாரோ, அப்படிப் போலவே அவர் ராஜாக்களையும் ஆசீர்வதித்து பயன்படுத்திக்கொண்டார். அவர் தமது மக்களை வழிநடத்தும்படி "சிறந்தவர்களிலேயே மிகச் சிறந்தவர்களைத்" தேடினார். ஆயினும், முதல் ராஜாவாகிய சவுல் விஷயத்தில், இஸ்ரவேலர் எப்படிப்பட்ட ராஜாவை எதிர்பார்த்தார்களோ அப்படிப்பட்ட ராஜாவையே கொடுத்தார். அவர்களது உண்மையான தேவைகளை சந்திக்கும்படியாக இரண்டாவது ராஜாவாக தாவீதை அவரே தேர்ந்தெடுத்தார். அந்த ராஜாக்கள் தங்களை பெரியவர்களாகக் காட்டிக்கொள்வதற்காக அந்த அதிகாரத்தை அவர் அவர்களுக்கு கொடுக்கவில்லை. தேவனாகிய "அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி

கர்த்தாவும்” ஆக இருந்தவர், இருக்கின்றவர், இனி எப்போதும் இருக்கப்போகின்றவர். *1 தீமோத்தேயு 6:15.* தேவனைப் பற்றி உலகத்திற்கு தெரிவிக்கக்கூடிய கருவியாக மாத்திரம் அவர் இஸ்ரவேலரை நினைக்கவில்லை; அவர்கள் ஒவ்வொருவருடைய ஆத்துமாவையும் காப்பாற்றும்படியாகவே அவர் விரும்பினார். “அவரிடத்தில் யாதொரு மாறுதலும்” இல்லை. *யாக்கோபு 1:17.* தேவனானவர், தாவீது மனந்திரும்பியது போல, “ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ள வராயிருக்கிறார்.” *2 சாமுவேல் 12:13; 2 பேதுரு 3:9.*

இஸ்ரவேல் தேசத்தில் தேவனுடைய ராஜ்யம் இருந்ததைப் பற்றி சில முக்கியமான அம்சங்களை பின்வருமாறு சுருக்கமாகக் காணலாம்:

*2 சாமுவேல் 7:12-16*

“உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது, நான் உனக்குப்பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி, அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன். அவன் என் நாமத்திற்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான்; அவன் ராஜ்ய பாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்.”

தேவன், தாம் திட்டமிட்டிருந்தபடி இஸ்ரவேல் தேசத்தை உருவாக்குவதற்கு தமக்கு ஒத்துழைப்பு கொடுத்தவனும், விசுவாசமும் தைரியமும் உள்ளவனுமாயிருந்த தாவீதை ஆசீர்வதித்தார். “தேவனுடைய இஸ்ரவேலர்” ஆகிய தேவனுடைய ஜனங்களை ஒரு ராஜா இப்பொழுது ஆளுகை செய்கிறார். ஒரு கன்னிகைக்கு மகனாகப் பிறந்த நசரேயனாகிய இயேசுகிறிஸ்து மூலமாக தேவன் தாவீதுக்குப் பண்ணியிருந்த வாக்குத்தத்தம் நிறைவேறியது. *லூக்கா 1:28-33; அப். 2:32-36; 5:31; கலாத்தியர் 6:16.*





சிங்காசனத்தின் மீதிருந்த ராஜாவை மையமாக வைத்தே, தேவனுடைய ராஜ்யத்துடன் ஆபிரகாமின் சந்ததியாருக்கு இருந்த தொடர்பினைப் பற்றிய விவரங்களை, பல சந்தர்ப்பங்களில் வேதம் நமக்குத் தெரியப்படுத்துகின்றது. இதே நிலைமை அவர்களுடைய பத்துக் கோத்திரத்தார் அசீரியர்களால் சிறைபிடிக்கப்படும் வரையிலும், கடைசியாக யூதாவும், பென்யமீனும் பாபிலோனியர்களால் சிறைபிடிக்கப்படும் வரையிலும் கூட தொடர்ந்தது. எஸ்றா, நெகேமியா ஆகியோரையும், விசுவாசமும், தைரியமும் உள்ள மற்றவர்களையும் பயன்படுத்தி எருசலேமிலும், அதைச் சுற்றியுள்ள பகுதியிலும் வாழ்ந்து வந்த யூதர்களை தேவன் மீட்டுக்கொண்டுவந்தார்.

*1 இராஜாக்கள் 8:12,13*

“அப்பொழுது சாலொமோன்: காரிருளிலே வாசம்பண்ணுவேன் என்று கர்த்தர் சொன்னார் என்றும், தேவரீர் வாசம்பண்ணத்தக்க வீடும், நீர் என்றைக்கும் தங்கத்தக்க நிலையான ஸ்தானமுமாகிய ஆலயத்தை உமக்குக் கட்டினேன் என்றும் சொல்லி”

*1 நாளாகமம் 29:23*

“அப்படியே சாலொமோன் தன் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே கர்த்தருடைய சிங்காசனத்தில் ராஜாவாய் வீற்றிருந்து பாக்கியசாலியாயிருந்தான்; இஸ்ரவேலர் எல்லாரும் அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்கள்.”

*1 இராஜாக்கள் 11:9-11*

“ஆகையால் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சாலொமோனுக்கு இரண்டுவிசை தரிசனமாகி, அந்நியதேவர்களைப் பின்பற்ற வேண்டாம் என்று கட்டளையிட்டிருந்தும், அவன் கர்த்தரை விட்டுத் தன் இருதயத்தைத் திருப்பி, அவர் கற்பித்ததைக் கைக்கொள்ளா

மற்போனதினால் கர்த்தர் அவன்மேல் கோபமானார். ஆகையால் கர்த்தர் சாலொமோனை நோக்கி: நான் உனக்குக் கட்டளையிட்ட என் உடன்படிக்கையையும் என் கட்டளைகளையும் நீ கைக்கொள்ளாமற்போய் இந்தக் காரியத்தைச் செய்தபடியினால், ராஜ்யபாரத்தை உன்னிடத்திலிருந்து பிடுங்கி, அதை உன் ஊழியக்காரனுக்குக் கொடுப்பேன்."

*1 இராஜாக்கள் 12:16,17*

"ராஜா தங்களுக்குச் செவிகொடாததை இஸ்ரவேலர் எல்லாரும் கண்டபோது, ஜனங்கள் ராஜாவுக்கு மறுஉத்தரவாக: தாவீதோடே எங்களுக்குப் பங்கேது? ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்திரம் இல்லை; இஸ்ரவேலே, உன் கூடாரங்களுக்குப் போய்விடு; இப்போது தாவீதே, உன் சொந்த வீட்டைப் பார்த்துக் கொள் என்று சொல்லி, இஸ்ரவேலர் தங்கள் கூடாரங்களுக்குப் போய்விட்டார்கள். ஆனாலும் யூதாவின் பட்டணங்களிலே குடியிருந்த இஸ்ரவேல் புத்திரர்மேல் ரெகொபெயாம் ராஜாவாயிருந்தான்."

*1 இராஜாக்கள் 12:25*

"யெரொபெயாம் எப்பீராயீம் மலைத் தேசத்தில் சீகேமைக் கட்டி, அதிலே வாசம்பண்ணி, அங்கிருந்து போய்ப் பெனூவேலைக் கட்டினான்."

*2 இராஜாக்கள் 17:5,6*

"அசீரியா ராஜா தேசம் எங்கும் போய், சமாரியாவுக்கும் வந்து அதை மூன்று வருஷம் முற்றிக்கைபோட்டிருந்தான். ஒசெயாவின் ஒன்பதாம் வருஷத்தில் அசீரியா ராஜா சமாரியாவைப் பிடித்து, இஸ்ரவேலை அசீரியாவுக்குச் சிறையாகக் கொண்டுபோய்,





அவர்களைக் கோசான் நதி ஓரமான ஆலாகிலும் ஆபோரிலும் மேதியரின் பட்டணங்களிலும் குடியேற்றினான்."

*2 இராஜாக்கள் 25:1*

"அவன் ராஜ்யபாரம்பண்ணும் ஒன்பதாம் வருஷம் பத்தாம் மாதம் பத்தாந்தேதியிலே பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சாரும் அவனுடைய எல்லா இராணுவமும் எருசலேமுக்கு விரோதமாய் வந்து, அதற்கு எதிரே பாளயமிறங்கி, சுற்றிலும் அதற்கு எதிராகக் கொத்தளங்களைக் கட்டினார்கள்."

*எஸ்றா 1:5*

"அப்பொழுது எருசலேமிலுள்ள கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்குப் போகும்படி யூதா பென்யமீன் வம்சங்களின் தலைவரும் ஆசாரியரும் லேவியருமன்றி, எவர்கள் ஆவியை தேவன் ஏவினாரோ அவர்கள் எல்லாரும் எழும்பினார்கள்."

மாம்சத்துக்குரிய இஸ்ரவேலரைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியமான அம்சங்கள் இவைகள் தான். தனி நபர் வரலாறுகளை நாம் படித்து அறிந்துகொள்வதற்கு இவைகள் பிரயோஜனமாக இருக்கும். பழைய ஏற்பாட்டுப் பகுதியை நாம் படிக்கும் போது, நமது மனதில் தெளிவாக சில விவரங்கள் இருக்க வேண்டும்; தேவன் நன்மை செய்கிறவர், சாத்தான் அவருடைய எதிராளி, இதனுடைய இறுதிகட்டம் என்னவென்றால், மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசினுடைய வல்லமையிலிருந்து தேவன் தமது மக்களை எப்படிக் காப்பாற்றுகின்றார் என்பதுதான். *எபிரெயர் 2:14,15.* மனிதர்களுடைய பிரச்சனைக்கு பழைய ஏற்பாட்டில் நம்மால் தீர்வு காணமுடியாது. எருசலேம் தேவாலயத்திலிருந்த பிரதான ஆசாரியர்கள், மூப்பர்கள் நிமித்தமாக கனி கொடுப்பதை மையமாக வைத்து இயேசு ஒரு உவமையை சொன்னார், அவருடைய சுருக்கமான அறிவிப்பு இதுதான்:

*மத்தேயு 21:43*

"ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, **அதற்கேற்ற கனிகளைத் தருகிற** ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்."

யூதா சிறைபிடிக்கப்படுவதற்கு முன்பாக, தேவன் விரும்பாத கனியை அந்த மக்கள் கொடுத்ததற்காக ஏசாயா ஒரு உவமையை பயன்படுத்தி அவர்களை எச்சரித்தான்.

*ஏசாயா 5:7*

"சேனைகளின் கர்த்தருடைய திராட்சத்தோட்டம் இஸ்ரவேலின் வம்சமே; அவருடைய மனமகிழ்ச்சியின் நாற்று யூதாவின் மனுஷரே; அவர் நியாயத்துக்குக் காத்திருந்தார், இதோ, கொடுமை; நீதிக்குக் காத்திருந்தார், இதோ, முறைப்பாடு."

வேதத்திலுள்ள எந்த ஒரு தனிநபர் வரலாற்றையும் மூன்று நிலை கொள்கையை பயன்படுத்தி நாம் வாசிப்பது போலவே மாம்சத்துக்குரிய இஸ்ரவேல் தேசத்தைப் பற்றியும் வாசிக்கவேண்டும். தனி நபர் வரலாறுகளை நாம் படிக்கும்போது, தேவன் தாம் தேர்ந்தெடுத்த நபரைப் பற்றி நம்மிடம் பேசுவது போலவே வாசிக்கிறோம். அதே நேரத்தில் இந்தக் கேள்விக்கு பதிலைத் தேடுகிறோம்: "இந்தக் குறிப்பிட்ட தனிநபர் வாழ்க்கையில் தேவன் என்ன செய்துகொண்டிருக்கிறார்?" இதற்கடுத்த மிக முக்கியமான கேள்வியை நாம் கேட்கிறோம்: "இந்தத் தனிநபர் வாழ்க்கையில் தேவன் செய்கின்ற செயல்கள் அவருடைய பரலோக ராஜ்யத்தில் "பிள்ளைகளை" உருவாக்குவதற்கு எந்த விதத்தில் பிரயோஜனப்படுகின்றன?"